அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 8/88

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு, 7
1988, மார்ச்சு 11.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,

1985 டிசெம்பர் 31இல் அல்லது அதற்கு முன்னர் (இளைப்பாறுகை, மரணம் போன்றவற்றால்) அரசாங்க சேவையில் பணி செய்கை ஒழிந்த உத்தியோகத்தர்களுக்கு கடன் வழங்கு சபை உதவு தொகை மீளளிப்பு

1986.11.26ஆம் தேதியிட்ட 353ஆம் இல. அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 4ஆம் பந்தியைப் பார்க்க. மீளளிப்பு விண்ணப்பங்கள் கடன் வழங்கு சபைப் பணிப்பாளர்க்கு, 1987 மார்ச்சு 31இல் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டுமென அது குறிப்பிட்டிருந்தது.

02. 1987 மார்ச்சு 31இல் அல்லது அதற்கு முன்னர் அரசாங்க சேவையில் பணிசெய்கை ஒழிந்த உத்தியோகத்தர்கள் தொடர்பான விண்ணப்பங்கள், 1988 ஏப்ரல் 30ஆம் திகதிக்குப் பின்னர் கடன்வழங்கு சபைப் பணிப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதைக் கவனத்திற் கொள்க.

ஒப்பம்: டி.பி.ஜ.பி.எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு